*பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு*

*திருவழிபாடு ஆண்டு* - C

2025-05-18

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 14:21-27,*

*திருப்பாடல்கள் 145: 8-13,*

*திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 21: 1-5,*

*யோவான் எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 13: 31-33*a, 34-35)

*திருப்பலி முன்னுரை*

*ஆண்டவரின் அன்புக்குரியோரே, நம் அன்பராம் இயேசுவின் பெயரால், பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம். நமது ஆண்டவர் இயேசு நம்மை அன்பு செய்தது போன்று, நாமும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டவர்களாய் வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்துவின் வாழ்வு கடவுளை மாட்சிப்படுத்தியது போல, நம் அன்பு வாழ்வின் வழியாக கடவுளை மாட்சிப்படுத்த நாம் அழைக்கப்பட்டுளோம். இயேசுவின் அழைப்புக்கு ஏற்ப அவரது சீடர்களாய் வாழ்ந்து, கடவுள் தரும் மாட்சியைப் பெற வரம் வேண்டி, நாம் இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

*விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*வாழ்வின் வழியாம் இறைவா,*

*திருச்சபையின் மக்கள் அனைவரும் இறையன்பிலும், பிறரன்பிலும் வளர வழிகாட்டு பவர்களாய் திகழும் வரத்தை திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*வாழ்வின் ஒளியாம் இறைவா,*

*கிறிஸ்தவ உண்மைகளை எதிர்ப்பதையே நோக்கமாக கொண்டு வாழும் மாற்று சமயத்தினர் அனைவரும் மனந்திரும்பி, உமது உண்மையின் ஒளியை நோக்கி முன்னேற அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*இறைவா! எம் தந்தையே!*

*திருச்சபையின் பொறுப்பாளர்களான உமது அடியார்கள் தம் பணிவாழ்வில் வருகின்ற பாதகங்கள், வேதனைகள் கண்டு மனம் வெதும்பிடாமல், நம்பிக்கையில் நிலைபெற்றுப் பிறரை ஊக்குவிக்கும் வரம்தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*எல்லோரிலும் செயலாற்றும் தந்தையே!*

*உமக்கு இடம், பொருள். காலம் தடையாயிருப்பதில்லை என நம்புகிறோம். எமக்குள் வல்லமையாய்ச் செயல்பட்டு உமது திருமகனின் திருவுடலாம் திருச்சபையைத் தீரமுடன் கட்டியெழுப்ப எமக்கு உதவியாய் இருக்க இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*வாழ்வின் இலக்காம் இறைவா,*

*கிறிஸ்தவர்கள் செய்யும் சமூக நலப் பணிகளை தவறாக கண்ணோக்கும் இயக்கங்களின் வழிகாட்டுதலால் மனதில் நஞ்சு கலந்திருக்கும் இளைஞர்கள், நீரே வாழ்வின் உண்மையான இலக்கு என்பதை உணர உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

வாழ்வின் துணையாம் இறைவா,

நோய், துன்பம், அழுகை போன்றவற்றையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் மக்கள், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் சுவைக்கும் வகையில் புதிய வாழ்வைக் காண துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

மேன்மைமிகு அரசராம் இறைவா,

பிற சமயத்தினரின் அவமதிப்புகளை பொருட்படுத்தாமல், உலகெங்கும் வாழும் மக்களுக்கு உம் திருமகனது உயிர்ப்பின் நற்செய்தியைக் கொண்டு சேர்க்கும் கருவிகளாக கிறிஸ்தவர்கள் அனைவரையும் உருமாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.